விசுவாசியாக இருக்கும் நபர்
எங்கேயிருந்தாலும், அது ஒருபொருட்டேயல்ல,
தேவன் தாம் தேவனாக இருப்பது எவ்வளவு
நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, அவர்
ஏதாவது ஒருவிதத்தில் உண்மையான செய்தியை
அவர்களிடம் கொண்டுபோய் சேர்த்து விடுவார்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா,**
அக்டோபர் 2, 1956, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

---

60. இந்நிலையில், எலிசா சூனேம் என்னப்பட்ட ஒரு சிறு இடம் வழியாகக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அந்த இடம் வேதாகமத்தில் மிகச்சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. யோசுவாவில், அவர்கள் தேசங்களைப் பங்கிட்ட போது, சூனேம் என்ற இந்தச் சிறிய இடம் எங்கேயிருந்தது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். **ஆனால் ஒவ்வொரு சிறிய இடத்திலும், தேவன் எங்கோ ஒரு சாட்சியைக் கொண்டிருக்கத் தான் போகிறார்.** அவ்வண்ணமாக, அதற்கு இசைய அங்கே சூனேமில், ஒரு உண்மையான பெண்மணி வசிக்க நேர்ந்தது. அவள் ஒரு விசுவாசமுள்ள பெண்ணாக (loyal woman) இருந்தாள், அவள் ஒரு உண்மையான சீமாட்டி. அவளுடைய புருஷன் வயது முதிர்ந்த ஒருவனாக இருந்தான்.

61. எலிசா, அதனூடாகப் போகும்படி நேரிட்டது, அவன் மேலே கர்மேல் பர்வதத்துக்கு

போய்க் கொண்டிருந்தான். அவன் மேலே போகும் பாதையில், கர்மேல் பர்வதத்துக்குப் போக வேண்டுமானால், சூனேம் வழியாகத்தான் போக வேண்டியிருந்தது. இப்பொழுது, எலிசாவுக்கு அங்கு மேலே ஒரு குகை இருந்தது. அவன் ஜெபிக்கப் போகும் இடமாகிய ஒரு பிரத்யேகமான குகை அவனுக்கு இருந்தது. தற்செயலாக, மேலே கர்மேல் பர்வதத்தில் ஒரு குகை இருந்தது, அதுதான் அது. அவன் அமாவாசையிலும் (new moon - பொதுவாக பூமியில் இருந்து நிலவின் ஒரு பகுதியை மட்டுமே நாம் பார்க்க முடியும். எனவே நிலவு பூமிக்கும், சூரியனுக்கும் நடுவில் சுற்றி வரும் போது, நிலவில் நமக்கு தெரியாத மறு பகுதியில் மட்டுமே சூரிய ஒளி படுகிறது. அப்போது நம் கண்களுக்கு நிலவானது புலப்படாது, இதை தான் நாம் அமாவாசை என்று கூறுகின்றோம் - மொழிபெயர்ப்பாளர்.), ஓய்வு நாளிலும் ஜெபிக்கும்படியாக அங்கே மேலே போவான்.

62. நல்லது, அவன் பட்டணத்திலே மிக நன்கு விரும்பப்பட்டவன் அல்ல என்று நினைக்கிறேன், அவன் அதனூடாகக் கடந்து போகையில், அவன் புறக்கணிக்கப்படுவதை (rejected - நிராகரிக்கப்படுவதை,

ஒதுக்கித்தள்ளப்படுவதை, வெளியேற்றப்படுவதை, விலக்கிவைக்கப்படுவதை, மறுக்கப்படுவதை, அங்கீகரிக்கப்படாதிருப்பதை, அப்புறப்படுத்தப்படுவதை, கைவிடப்படுவதை, ஒதுக்கப்படுவதை, தள்ளப்படுவதை, ஏற்க மறுக்கப்படுவதை, தள்ளிவிடப்படுவதை, துரத்தப்படுவதை - மொழிபெயர்ப்பாளர்) இந்தப் பெண்மணி நிச்சயமாகக் கண்டிருக்க வேண்டும். சூனேமானது, அவன் தன்னுடைய பிரயாணத்தில் போகக்கூடிய அளவுக்கு ஏறக்குறைய மேலே அவ்வளவு தூரத்தில் இருந்தது, அங்கே இரவு முழுவதும் தங்க வேண்டியிருந்தது. எனவே அவன் அதன் பக்கமாகக் கடந்து போகையில், அவன் ஒருக்கால் தெரு (வீதிகளிலோ), அல்லது காடுகளிலோ, எங்கேயோ இருந்த வயல்வெளிகளிலோ தங்கியிருப்பான், ஒருக்கால், சிலநேரங்களில், ஆகாரமும் இல்லாமல் இருந்திருப்பான். இந்த நல்ல பெண்மணியோ, அவள் மேலே பட்டணத்திற்குள் போகையில், இந்த மனிதனை அவள் துரிதமாக அடையாளம் கண்டுகொண்டு, அவன் ஒரு பரிசுத்தவான் என்பதை அறிந்துகொண்டாள்.

63. இப்பொழுது, அவள் ஒரு சூனேமிய ஸ்திரீயாக இருந்தாலும், தன்னுடைய இருதயத்தில்,

அவள் ஒரு விசுவாசியாக இருந்தாள். **விசுவாசியாக இருக்கும் நபர் எங்கேயிருந்தாலும், அது ஒருபொருட்டேயல்ல, தேவன் தாம் தேவனாக இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, அவர் ஏதாவது ஒருவிதத்தில் உண்மையான செய்தியை அவர்களிடம் கொண்டுபோய் சேர்த்து விடுவார்.** அது சரியே. ஏதோவொரு இடத்தில் அதைக் கொண்டுபோய் சேர்க்கும்படியாக அவர் அதை நிறைவேற்றுவார் (manage - நடத்துவார், இயக்குவார் - மொழிபெயர்ப்பாளர்). எங்கோவிருக்கும் யாரோ ஒருவரின் இருதயத்தில் அவர் தொடர்ச்சியான ஒரு நோவை வைத்துவிட, அவர்கள் இவர்களுக்கு கடிதம் எழுதுவார்கள், வானொலியைத் திருப்பியோ, அல்லது வேறு ஏதோ ஒரு வழியில் இவர்கள் ஒரு சாட்சியைக் கேட்பார்கள்; இவர்கள் உண்மையான செய்தியைக் கேட்பார்கள். தேவன் அவர்களுக்கு அதை அருளிவிடுவார்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★